செ. கு. எண்: 147 நாள்:15.06.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 15.6.2013**

---

காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை வெளியிட்ட பின், நான்காண்டு காலம் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி, "இந்த ஆண்டு குறுவை சாகுபடி உண்டா?" என்ற தலைப்பில் 12.6.2013 அன்று ஒரு குதர்க்கமான அறிக்கையை வெளியிட்டு இருப்பது சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது.

பருவமழை இயல்பாக இருக்கும் காலங்களில், மேட்டூர் அணையில் ஓரளவு தண்ணீர் இருக்கும் என்பதும், ஜூன் மாதம் கர்நாடக மாநிலத்தில் பருவமழை பெய்யத் தொடங்கியதும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஏற்படும் என்பதும், மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இருந்தால் தான் ஜூன் 12 ஆம் தேதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை திறக்கப்படும் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை.

நான் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற சமயத்தில், மேட்டூர் அணையில் போதுமான நீர் இருந்ததால், ஜூன் 12 ஆம் தேதி என்பதற்குப் பதிலாக, முதன் முறையாக ஜூன் 6 ஆம் தேதியே குறுவை சாகுபடிக்காக முன்கூட்டியே தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன் காரணமாகவும், பல்வேறு புதிய சாகுபடி உத்திகளை கடைபிடித்ததன் காரணமாகவும், 2010–2011 ஆம் ஆண்டு 76 லட்சம் டன் என்று இருந்த தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி, 2011–2012 ஆம் ஆண்டு 102 லட்சம் டன்னாக உயர்ந்ததோடு, இதற்காக மத்திய அரசின் விருதும் தமிழகத்திற்கு கிடைத்தது. இதையெல்லாம் மறந்தும், மறைத்தும், "ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு ஓர் ஆண்டு கூட ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை ..." என்று திரு. கருணாநிதி அறிக்கை விட்டிருப்பது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் அமைந்துள்ளது.

கடந்த ஆண்டு, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாகவும்; எனது தலைமையிலான தமிழக அரசு பல முறை வற்புறுத்தியும் தி.மு.க. தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த மத்திய காங்கிரஸ் அரசும், பிரதமர் தலைமையிலான காவேரி நதிநீர் ஆணையமும் இடர்ப்பாடு பங்கீட்டு முறைக்கு ஒப்புதல் அளிக்காததன் விளைவாகவும், கர்நாடகம் இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை வழங்காததன் காரணமாகவும், மேட்டூர் அணையில் தற்போது 17.65 அடி, அதாவது 3.45 டி.எம்.சி. அடி தண்ணீர் மட்டுமே உள்ள சூழ்நிலையில், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவது என்பது இயலாத ஒன்று. இதை காவேரி டெல்டா விவசாயிகளும் நன்கு அறிவார்கள்.

இந்தச் சூழ்நிலையில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, என் மீதும், எனது தலைமையிலான அரசின் மீதும் ஏதாவது அவதூறு பரப்ப வேண்டும் என்ற தீய எண்ணத்தில், "அதிமுக அரசு இனியாவது விழித்துக் கொண்டு இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி உண்டா? இல்லையா? நீர் கிடைக்குமா? கிடைக்காதா? விவசாயிகள் என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றியும் .. தெளிவுபடுத்த வேண்டும்" என்று கேலிக்கூத்தான, நகைப்புக்குரிய, தெளிவற்ற அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி.

விவசாயிகளின் நலனுக்காக விழிப்புடன் மட்டுமல்லாமல், விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்திலும் நான் செயல்பட்டு வருகிறேன். எனவே தான் 2012 ஆம் ஆண்டு பருவமழை பொய்த்த சூழ்நிலையிலும், கர்நாடகம் தண்ணீர் அளிக்க மறுத்த

சூழ்நிலையிலும், உயர் தொழில் நுட்பங்களையும், புதிய உத்திகளையும் விவசாயிகளிடையே விளக்கி, வேளாண் உற்பத்தியை உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களில் வறட்சி நிலையிலும் நெல் சாகுபடி மேற்கொள்ளும் வகையில் 68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டம், வாடும் நிலையில் இருந்த நெற்பயிரைக் காப்பாற்ற 69 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் கூடுதல் சிறப்பு உதவிகள், நுண்ணீர் பாசனங்களுக்கு மிக அதிக அளவு மானியம், நீர் ஆதார வளத்தினை பெருக்கிட 70,000 பண்ணைக் குட்டைகள், வேளாண் பணியாளர் பற்றாக்குறையினை போக்கும் வகையில் இயந்திரங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல், வேளாண்மை விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டன.

இந்தியாவிலேயே முதன் முறையாக வறட்சிக்கு நிவாரணம் அளித்ததோடு மட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளையும் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்காக, விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் எனது அரசே செலுத்தியது. இதன் காரணமாக, டெல்டா மாவட்டங்களில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்த 3.61 லட்சம் ஏக்கர் நெற்பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வீதம், 3 லட்சத்து 52 ஆயிரத்து 613 விவசாயிகளுக்கு 524.25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. டெல்டா அல்லாத மாவட்டங்களைப் பொறுத்தவரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு நெற்பயிருக்கு ஏக்கருக்கு 5,000 ரூபாயும், பாசன ஆதாரமுள்ள நிலங்களில் இதர பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 4,000 ரூபாயும், பாசன ஆதாரமற்ற நிலங்களில் பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாயும், தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு 4,000 ரூபாயும் என 16 லட்சத்து 3 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் 756 கோடியே 22 லட்சம் ரூபாய் அளவுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக வறட்சி நிவாரணப் பணிகளுக்கென 3,881 கோடியே 65 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அதிகாரிகளும், வேளாண்மைத் துறை அலுவலர்களும் இணைந்து ஒவ்வொரு கிராமத்திலும் ஆய்வு செய்து, பாதிப்படைந்துள்ள விவசாயிகள் அனைவரையும் கண்டறிந்து, அவர்களுக்கான நிவாரணத்தை அவர்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளனர். அனைத்தும் வெளிப்படையான முறையில், எவ்வித முறைகேடுகளுக்கும் இடமளிக்காத வகையில் நடைபெற்றுள்ளன.

இவ்வாறு விழி இமை போல் விவசாயிகளைக் காத்து வரும் எனது தலைமையிலான அரசைப் பார்த்து "இனியாவது விழித்துக் கொண்டு..." என்று திரு. கருணாநிதி கூறுவது "தூங்குபவரை எழுப்பலாம், தூங்குபவரைப் போல் நடிப்பவரை எழுப்ப முடியாது" என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட தான் ஆட்சியில் இருந்தது வரை நடவடிக்கை எடுக்காத திரு.கருணாநிதி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை வழங்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டதால், அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தற்காலிக காவேரி மேற்பார்வைக் குழுவிடம் கேட்போம் என்று கர்நாடக முதலமைச்சர் கூறியதைக் குறிப்பிட்டு, இதற்காக அங்கே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டதை சுட்டிக் காட்டியிருப்பது நகைப்புக்குரியதாகவும், வியப்பளிப்பதாகவும் உள்ளது. இது குறித்து 12.6.2013 அன்று நடைபெற்ற காவேரி மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் கர்நாடக அரசு எழுப்பிய போது, தமிழகத்தின் சார்பில் தலைமை செயலாளரால் தக்க பதில் தரப்பட்டது; இதனை ஒரு போதும் தமிழக அரசு அனுமதிக்காது என்பதை "சுயநல" பாணியில் செயல்படும் திரு. கருணாநிதிக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் லாபத்திற்காக, சுய நலனுக்காக, குடும்ப நலனுக்காக தமிழக மக்கள் நலனை அடகு வைக்கக் கூடியவர், இரட்டை வேடம் போடக் கூடியவர் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி தான் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

இலங்கை ராணுவ வீரர்களுக்கு 'வெலிங்டனில்' உள்ள இராணுவ பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுவதை சுட்டிக்காட்டி, அவ்வாறு இலங்கை வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கப்பட மாட்டாது என பத்திரிகையாளர்களிடம் சென்ற மாதம் இந்திய ராணுவ அமைச்சர் தெரிவித்ததையும் சுட்டிக்காட்டி, இந்த விஷயத்தில் மத்திய அரசு இரட்டை வேடம் போடுகிறது என்று நான் பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் அளிக்கும் வகையில், மத்திய அரசுக்கு வலிய சென்று வக்காலத்து வாங்கும் வகையில் சமீபத்தில் அறிக்கை வெளியிட்டு இருந்தார் திரு. கருணாநிதி. மத்திய அரசிலிருந்து தி.மு.க. விலகிக் கொண்டுள்ள நிலையில், மத்திய அரசை திரு. கருணாநிதி ஏன் எதிர்க்கவில்லை என்றால், தன் மகள் கனிமொழி மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட காங்கிரஸ் கட்சியினுடைய ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பதால் தான் போலும்.

இதே போன்று, காவேரி நதிநீர்ப் பிரச்சனையில், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி செய்த துரோகங்களின் காரணமாகத்தான் காவேரி நதிநீர்ப் பிரச்சனை இன்றளவும் நீடித்து வருகிறது. "இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி உண்டா?" என்று திரு. கருணாநிதி வினா எழுப்பும் அளவுக்கு காவேரியில் தண்ணீர் வற்றியதற்கு காரணமே காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் திரு. கருணாநிதி செய்த துரோகங்கள் தான்.

இப்படிப்பட்ட திரு. கருணாநிதி, "எதற்கெடுத்தாலும் உச்ச நீதிமன்றத்தில் முறையிடுவதும், மத்திய அரசின் மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்ள முயற்சிப்பதும் என்ற போக்கிலே செயல்படுவதன் காரணமாக, உண்மையில் பலவகையிலும் பாதிக்கப்படுவோர் தமிழ்நாட்டின் விவசாயிகள் தான்" என்று அறிக்கை விட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

காவேரியில் நமக்குள்ள உரிமை இன்று நிலைநாட்டப்பட்டு இருக்கிறது என்றால், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு இருக்கிறது என்றால், அதற்கு முழு காரணமும் உச்ச நீதிமன்றத்திலே எனது தலைமையிலான அரசு முறையிட்டது தான் என்பதை இந்தத் தருணத்தில் திரு. கருணாநிதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால், திரு. கருணாநிதி என்ன செய்தார்? காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 5.2.2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதிலிருந்து, தான் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் செல்லும் வரை 4 ஆண்டு காலம் சாக்குப்போக்குச் சொல்லியே அதனை மத்திய அரசிதழில் வெளியிடாமல் பார்த்துக் கொண்டார். நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் இது குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன். காவேரி நதிநீர்ப் பிரச்சனை தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்த போது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை எப்போது மத்திய அரசிதழில் வெளியிடப்படும் என்று உச்ச நீதிமன்றம் வினா எழுப்பியதும், அதனை வெளியிட மத்திய அரசு தயாராய் இருந்த சூழ்நிலையில், திரு. கருணாநிதியின் ஆலோசனையின் பேரில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமரை சந்தித்தனர். இதனால் தானோ என்னவோ, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை அரசிதழில் வெளியிடுவதை மத்திய அரசு கைவிட்டுவிட்டது. பின்னர் எனது தலைமையிலான தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் இடைவிடாது வற்புறுத்தியதன் காரணமாகத்தான் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசிதழில் 19.2.2013 அன்று வெளியிடப்பட்டது.

அதன் பிறகும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் கூட்டணி அரசு ஏற்படுத்தவில்லை. பின்னர், எனது தலைமையிலான அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியதையடுத்து, இடைக்கால ஏற்பாடாக காவேரி மேற்பார்வைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் முதல் கூட்டம் **1.6.2013** அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், "ஜூன் மாதத்தில் தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் தர வேண்டிய 10 டி.எம்.சி. அடி நீர், கடந்த ஆண்டு சரிசம விகிதாச்சார முறைப்படி ஏற்பட்ட குறைபாட்டு நீரளவான 53.18 டி.எம்.சி. அடி நீர் என, 63.18 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்கு விடுவிக்க

வேண்டுமென தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. இதன் இரண்டாம் கூட்டம் 12.6.2013 அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலும் 63.18 டி.எம்.சி. அடி நீரை கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என தமிழகத்தின் சார்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

எனினும், கர்நாடகாவின் நான்கு பெரிய நீர்த் தேக்கங்களுக்கு போதுமான அளவில் நீர்வரத்து வராததால், தற்சமயம் தமிழகத்திற்கு தண்ணீர் விடுவிக்க இயலாத நிலை உள்ளது என இக்குழுவின் தலைவர் முடிவெடுத்து தமிழகத்திற்கு நீர் விடுவிப்பது குறித்து ஜூலை 2013 முதல் வாரத்தில் பரிசீலித்து முடிவெடுக்கலாம் என தீர்மானித்துள்ளார்.

காவேரி மேற்பார்வைக் குழுவின் கூட்டம் 12.6.2013 அன்று முடிந்தவுடன், குறுவை சாகுபடி குறித்த அறிவிப்பு எனது தலைமையிலான தமிழக அரசால் வெளியிடப்படும் என்பதை யூகித்துக் கொண்டு, 12.6.2013 அன்றே குதர்க்கமான, குரோதமான, முரண்பாடான அறிக்கையை வெளியிட்டுள்ளார் திரு. கருணாநிதி. திரு. கருணாநிதியின் விதண்டாவாதத்தைப் பார்க்கும் போது, குறுவை சாகுபடிக்கு தண்ணீர் வரக் கூடாது என்று நினைக்கிறாரோ என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

தற்போது மேட்டூர் அணையில் 3.45 டி.எம்.சி. அடி தண்ணீரே உள்ள நிலையில், ஜூன் முற்பகுதியில் காவேரி நீர்பிடிப்புப் பகுதியில் பெய்யும் மழையின் அளவையும், மேட்டூரில் நமக்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவையும் கருத்தில் கொண்டு தான் இந்த ஆண்டு குறுவை சாகுபடி மேற்கொள்வது குறித்த நடவடிக்கையை எடுக்க முடியும். இந்தச் சூழ்நிலையில் ஜூன் 12 ஆம் தேதியே “குறுவைச் சாகுபடி உண்டா?” என்று திரு. கருணாநிதி கேள்வி எழுப்புவது கேலிக்கூத்தாக உள்ளது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி, தமிழ்நாட்டிற்கு உரிய தண்ணீர் பெறப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. காவேரி நீர்பிடிப்புப் பகுதியில் மழை பெறப்பட்டவுடன், நமக்கு உரிய தண்ணீர் பெறப்படும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை திரு. கருணாநிதிக்கு சுட்டிக்காட்டுவதோடு, 1 லட்சம் ஏக்கர் பரப்பில் விரைவில் நடவுப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உதவிடும் வகையிலான ஒரு திட்டத்தினையும் நான் 14.6.2013 அன்று அறிவித்துள்ளேன்.

மேலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைத்திட உச்ச நீதிமன்றத்தை தமிழக அரசு அணுகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கையின் கருணையால், மக்களின் நல்லெண்ணத்தால் போதிய அளவு மழை பெய்து, எனது அரசின் நடவடிக்கையால் காவேரியில் நமக்குரிய தண்ணீர் நிச்சயம் கிடைக்கப் பெறும். இதன் மூலம் குறுவை சாகுபடி பரப்பு அதிகரிக்க வழி ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியின் கெடுமதி எண்ணமும் தூள்தூளாகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**